**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மன்னார்குடி**

முன்னிலை: **திரு.ஜெ.தமிழ்முருகன்,**பி.ஏ.,பி.எல்.,

2026–ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02 ஆம் நாள் செவ்வாய்கிழமை

2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் வைகாசி மாதம் 12–ம் நாள்.

**சுருக்குமுறை விசாரணை வழக்கு எண். 1394/2017**

**CASE SUMMARY**

<table>
<tr><th>Sl.No.</th><th>Description</th><th colspan="3">Remarks</th></tr>
<tr><td>1</td><td>The period of remand of the accused</td><td colspan="3">Remanded on : AB surrender<br><br>Released on : 03.03.2017</td></tr>
<tr><td>2</td><td>The date of filing of complaint/final report in the Court</td><td colspan="3">02.08.2017</td></tr>
<tr><td>3</td><td>The date of committal of the case to the Court of Sessions</td><td colspan="3">Not Applicable</td></tr>
<tr><td>4</td><td>The date of Questioning of accused U/S 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be</td><td colspan="3">21.09.2017</td></tr>
<tr><td>5</td><td>Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code .</td><td colspan="3">U/S 359 BNSS Petition filed on 25.05.2025 and Dismissed .</td></tr>
<tr><td rowspan="5">6</td><td rowspan="5">Date of examination in Chief and Cross examination of a witness</td><td></td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW1</td><td>25.05.2026</td><td>25.05.2026</td></tr>
<tr><td>PW2</td><td>25.05.2026</td><td>25.05.2026</td></tr>
<tr><td>PW 3</td><td>25.05.2026</td><td>25.05.2026</td></tr>
<tr><td>PW 4</td><td>25.05.2026</td><td>25.05.2026</td></tr>
<tr><td>7</td><td>Date of examination of the accused under section 313 of the Court</td><td colspan="3">26.05.2026</td></tr>
<tr><td>8</td><td>Details of Abscondence of an accused and his appearance /production, as the case may be</td><td colspan="3">Not Applicable</td></tr>
<tr><td>9</td><td>Grant of stay by superior Courts and the results thereof</td><td colspan="3">Not Applicable</td></tr>
</table>

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 19:33:37 +0530

**// எதிராக//**

| | | |
|---|---|---|
| **அரசுக்காக:**<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>மன்னார்குடி காவல் நிலையம்,<br>குற்ற எண். 135/2017<br>ச/பி. 448,294(b), 323, 506(1) IPC. | | .............குற்றமுறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| அறிவழகன், வயது 44/17,<br>த/பெ. வீரபாண்டியன்,<br>வடக்கு தெரு, மேலவாசல்,<br>மன்னார்குடி. | | ...................... எதிரி |

இவ்வழக்கானது கடந்த 02.08.2017 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு, இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்து, இன்று 26.05.2026 என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் திரு. ஆனந்த், B.A.,B.L., நிலை.2 அவர்களும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. N. சுவாமிநாதன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகி, இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இன்று (26.05.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.......

**//தீர்ப்புரை//**

**<u>1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>**

கடந்த 11.02.2017 ம் தேதி காலை 11.00 மணிக்கு மன்னார்குடி நகர காவல் சரகம், மேலவாசல், திருமுருகன் உயர்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வி குழு கூட்டம் நடைபெற்ற போது இவ்வழக்கின் எதிரி அத்துமீறி கூட்டத்திற்குள் நுழைந்து நான் பதவி உயர்வு கேட்டிருக்கும் போது எனக்கு வழங்காமல் யாருக்கும் வழங்கக் கூடாது என்று சத்தம் போட்டு தன் கையில் வைத்திருந்த கட்டையை எடுத்து வாதி கலைமணியை நெஞ்சிலும், நெற்றியிலும் அடித்தும் என்னைக்கிருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியும் குச்சிகாரி தேவடியா மகனே என்று திட்டியும் வாதி கலைமணிக்கு சொற்ப காயத்தை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரியின் செய்கையானது பிரிவுகள் 448,294(b), 323, 506(1) IPC ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என மன்னார்குடி நகர காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>2. நகல் வழங்கல்</u>**

எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 19:33:52 +0530

**3. குற்றச்சாட்டு வனைதல்**

எதிரியிடம் குற்றம் பற்றி வினவ போதிய முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது பிரிவுகள் 448,294(b), 323, 506(1) IPC ன் கீழ் கு.வி.மு.ச பிரிவு 240(1) ன் படி குற்றச்சாட்டு வனைந்து தமிழில் விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றச்சாட்டை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் 4 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், சான்றாவணங்கள் அசாஆ.1 முதல் 9 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4.அரசுத்தரப்புசாட்சியங்களிலிருந்துபுலனப்படும்அரசுத்தரப்புவழக்கின்சுருக்கம்**

**அ.சா.1 கலைமணி** தனது சாட்சியத்தில் கடந்த 11.02.2017 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் திருமுருகன் உயர்நிலை பள்ளிக்கட்டிடத்தில் பள்ளி கல்விக் குழு கூட்டம் நடைபெற்றதாகவும், அந்த கூட்டத்தில் வந்தருந்தவர்களிடையே சச்சரவு ஏற்பட்டு தள்ளுமுள்ளு ஏற்பட்டதாகவும் தான் அந்த சம்பவத்தில் கீழே விழுந்துவிட்டதாகவும் தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும் எதிரி அந்த கூட்டத்தில் கலந்து கொண்டதால் அவருக்கும் தனக்கும் இருந்த மனவருத்ததின் அடிப்படையில் அவர் தான் தன்னை தாக்கியிருப்பார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் அளித்ததாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ம் மூலமாக புகார் வாக்குமூலுத்திலுள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.2 பாலகிருஷ்ணன்** தனது சாட்சியத்தில் இருவருக்கும் என்ன பிரச்சனை என்று தனக்கு தெரியாது வழக்கு குறித்து எந்த விவரமும் தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.3 சந்திரன் தனது சாட்சியத்தில் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 1வது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் மேற்படி கையொப்பத்தை தான் சொந்தவேலையாக காவல் நிலையம் சென்றிருந்தபோது போலிசார் கேட்டுக் கொண்டதன் பேரில் செய்து கொடுத்ததாகவும் வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அ.சா.4 திரு. சி.தங்கதுரை**, சிறப்பு உதவி ஆய்வாளர், ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக தனது சாட்சியத்தில் கடந்த 11.02.2017 ம் தேதியன்று மன்னார்குடி நகர காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திருமதி. உஷாராணி நிலைய பொறுப்பிலிருந்தபோது மன்னார்குடி மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த நடராஜன் மகன் கலைமணி



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 19:34:00 +0530

என்பவர் கொடுத்த அ.சா.ஆ–4 புகார் வாக்குமூலம் பதிவு செய்து, பின் நிலையம் வந்து அதனடிப்படையில் நிலைய மனு எண். 42/2017 மனு விசாரணைக்கு பின் 13.02.2017 ம் தேதி நிலைய குற்ற எண்.135/2017 இதச பிரிவுகள் 448, 294(பி), 323, 506(1)ன் கீழ் அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கையின் படி எதிரி மீது வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும் மேற்படி இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 12.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சந்திரன் மற்றும் கந்தசாமி ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு அ.சா.ஆ–6 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ–7 மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார் என்றும் பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார் என்றும் சம்பவம் உண்மை என தெரியவந்ததும் எதிரியை தேடிய போது முன் பிணையம் பெற்று சென்ற விவரம் தெரிந்து கொண்டதாகவும், இவ்வழக்கில் காயம் அடைந்த வாதிக்கு என்பவருக்கு அ.சா.ஆ.8 விபத்து பதிவேடு பதிவு செய்தும், முதல் உதவி சிகிச்சை அளித்த மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனை மருத்துவர் சிலம்பரசன் மற்றும் கண்ணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் அ.சா.ஆ–9 காயச்சான்றினை பெற்று இவ்வழக்கில் பதிவு செய்துள்ளார் என்றும் இத்துடன் அவரது விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 448, 294(பி), 323, 506(1)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என கடந்த 28.06.2017 ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**5. எதிரியிடம் பிரிவு 351(1)(b) BNSS ன் கீழ் வினவுதல்**

மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து இவ்வழக்கின் எதிரிக்கு பாதகமாக தோன்றியவற்றை தொகுத்து பிரிவு 351(1)(b) BNSS ன் கீழ் வினவியபோது எதிரிகள் பொய் சாட்சியம் என்றும், பொய் வழக்கு என்றும் கூறி மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரையும் விசாரிக்கவோ, ஆவணங்கள் எதுவும் குறியிடப்படவோ இல்லை.

**6. தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம்**

இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை ஆகும்.

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 19:34:09 +0530

7. அரசுத்தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதிட்டார்.

8. எதிரி தரப்பு வழக்கறிஞர், எதிரி மீது புகார்தாரரால் பொய்யான புகார் கொடுக்கப்பட்டு வழக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது என வாதிட்டார்.

**9. தீர்வு :**

இவ்வழக்கின் பிரிவுகள் 448,294(b), 323, 506(1) IPC ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. மேலும், அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 ன் சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், பட்டியல் சாட்சிகள் 2,3 மற்றும் 6 முதல் 9 வரை அரசுத்தரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் விசாரணை அதிகாரியான பட்டியல் சாட்சி 9 காவல் உதவி ஆய்வாளர் திருமதி. உஷாதேவி அரசுத்தரப்பில் நீக்கரவு செய்யப்பட்டு அவருக்கு பதிலாக சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. தங்கதுரை என்பவரை கூடுதல் சாட்சியாக சேர்த்து விசாரிக்க கோரியதன் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டு அ.சா.4 ஆக விசாரணை செய்யப்பட்டும் அசாஆ. 4 முதல் அசாஆ. 9 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் புகார்தாரர் அ.சா. 1 ஆகவும், கண்ணுற்ற சாட்சி அ.சா.2 ஆகவும், பார்வை மகசர் சாட்சி அ.சா.3 ஆகவும், புலன் விசாரணை அதிகாரிக்காக ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக அ.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

**10. குற்றச்சாட்டுகளுக்கான தீர்வு**

கடந்த 11.02.2017 ம் தேதி காலை 11.00 மணிக்கு மன்னார்குடி நகர காவல் சரகம், மேலவாசல், திருமுருகன் உயர்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வி குழு கூட்டம் நடைபெற்ற போது இவ்வழக்கின் எதிரி அத்துமீறி கூட்டத்திற்குள் நுழைந்து நான் பதவி உயர்வு கேட்டிருக்கும் போது எனக்கு வழங்காமல் யாருக்கும் வழங்கக் கூடாது என்று சத்தம் போட்டு தன் கையில் வைத்திருந்த கட்டையை எடுத்து வாதி கலைமணியை நெஞ்சிலும், நெற்றியிலும் அடித்தும் என்னைக்கிருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியும் குச்சிகாரி தேவடியா மகனே என்று திட்டி குற்றம் புரிந்துள்ளதாக பிரிவுகள் 448,294(b), 323, 506(1) IPC ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என்ற குற்றச்சாட்டுக்களை தீர்மானிக்கையில்……. ,

11) **இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 கலைமணி தனது சாட்சியத்தில்** " கடந்த 11.02.2017 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் திருமுருகன் உயர்நிலை பள்ளிக்கட்டிடத்தில் பள்ளி கல்விக் குழு கூட்டம் நடைபெற்றதாகவும், அந்த கூட்டத்தில் வந்தருந்தவர்களிடையே சச்சரவு ஏற்பட்டு தள்ளுமுள்ளு ஏற்பட்டதாகவும் தான் அந்த சம்பவத்தில் கீழே விழுந்துவிட்டதாகவும் தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 19:34:17 +0530

கொண்டதாகவும் எதிரி அந்த கூட்டத்தில் கலந்து கொண்டதால் அவருக்கும் தனக்கும் இருந்த மனவருத்ததின் அடிப்படையில் அவர் தான் தன்னை தாக்கியிருப்பார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் அளித்ததாக " என்று கூறி பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

**12) கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 பாலகிருஷ்ணன் தனது சாட்சியத்தில்** " இருவருக்கும் என்ன பிரச்சனை என்று தனக்கு தெரியாது வழக்கு குறித்து எந்த விவரமும் தெரியாது" என்று கூறி பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

13) **பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 சந்திரன் தனது சாட்சியத்தில்** " நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 1வது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் மேற்படி கையொப்பத்தை தான் சொந்தவேலையாக காவல் நிலையம் சென்றிருந்தபோது போலிசார் கேட்டுக் கொண்டதன் பேரில் செய்து கொடுத்ததாகவும் வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்று கூறி பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

14) அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் பிறழ் சாட்சியாகியிருந்ததால், அரசு தரப்பு வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்தபோதும், அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அவர்களின் சாட்சியம் அமையவில்லை. இந்த சூழ்நிலையில் மற்ற சாட்சிகளையும் விசாரிக்க வேண்டாமென்று குற்றத்துறை உதவி அரசு வழக்கறிஞர் அவர்களால் மேற்குறிப்பு செய்யப்பட்டு, புலன் விசாரணை அதிகாரிக்காக சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. தங்கதுரை அவர்கள் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

15) புகார்தாரரான அசா.1 மற்றும் எதிரி ஆகியோர் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் ஆகிவிட்டதாகக் கூறி இந்நீதிமன்றத்தில் சமரச மனு செய்துள்ளார்கள்.

16)அரசுத்தரப்பு சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானோர் அரசுதரப்பு வழக்கை நிரூபிக்கும் விதமாக சாட்சியம் அளிக்கவில்லை. சம்பவ நாளில் எதிரி தான் பள்ளிக் கல்விக்குழு கூட்டத்தில் அத்துமீறி நுழைந்து அ.சா.1யை தகாத வார்த்தைகளால் திட்டி, கட்டையால் நெஞ்சிலும், நெற்றியிலும் தாக்கி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், குற்றமுறு கொலைமிரட்டல் விடுத்துள்ளார் என்பதை சாட்சிகள் மட்டும் சான்றாவணங்களின் வாயிலாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்ய தவறியுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.06.02 19:34:25 +0530

17) எனவே, அ.சா.1 முதல் அ.சா.4 ஆகியோர்களின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரிக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட இவ்வழக்கின் எதிரி மீது 448,294(b),323,506(1) IPC ன் கீழான குற்றச்சாட்டுக்கள் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பால் மெய்ப்பிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

18) இறுதியாக , இவ்வழக்கின் எதிரி மீது 448,294(b), 323, 506(1) IPC ன் கீழ் குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு, பிரிவு 278(1) BNSS ன் கீழ் எதிரியை இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கின்றது.

19) எதிரி எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறியீட்டுக் காலத்திற்கு பிறகு தானாக ரத்தாக வேண்டியது.

20) இவ்வழக்கில் வழக்குச்சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்த உத்தரவு ஏதும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துதட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02 ஆம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 19:34:34 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
மன்னார்குடி.

**1. புகார்தாரர்/ மனுதாரர்அரசு தரப்பு சாட்சிகள்**

| சாட்சியின் வரிசை எண். | சாட்சியின் பெயர் | குறிப்பு |
|---|---|---|
| அசா.1 | கலைமணி | புகார்தாரர்–பிறழ்சாட்சி |
| அசா.2 | பாலகிருஷ்ணன் | கண்ணுற்ற சாட்சி–பிறழ்சாட்சி |
| அ.சா.3 | சந்திரன் | பார்வை மகசர் சாட்சி – பிறழ் சாட்சி |
| அ.சா.4 | திரு. தங்கதுரை, சிறப்பு உதவி ஆய்வாளர் | புலன்விசாரணைஅதிகாரி, ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சி |

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 19:34:41 +0530

**2. புகார்தாரர்/ மனுதாரர்அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| சான்றாவணங்களின் வரிசை எண் | தேதி | சான்றாவணம் குறிப்பு | சான்றளிக்கப்பட்ட/ ஒப்பமிட்டவரின் விவரம் |
|---|---|---|---|
| அ.சா.ஆ 1 | 13.02.2017 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் | அ.சா.1 |
| அ.சா.ஆ 2 | 25.05.2026 | சமரச மனுவில் உள்ள கையொப்பம் | அ.சா.1 மூலம் |
| அ.சா.ஆ 3 | 13.02.2017 | பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் | அ.சா.3 மூலம் |
| அ.சா.ஆ 4 | 13.02.2017 | புகார் வாக்குமூலம் | அ.சா.4 மூலம் |
| அ.சா.ஆ 5 | 13.02.2017 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 மூலம் |
| அ.சா.ஆ 6 | 13.02.2017 | பார்வை மகசர் | அ.சா.4 மூலம் |
| அ.சா.ஆ.7 | 13.02.2017 | மாதிரி வரைப்படம் | அ.சா.4 மூலம் |
| அ.சா.ஆ .8 | 11.02.2017 | விபத்து பதிவேடு | அ.சா.4 மூலம் |
| அ.சா.ஆ .9 | 22.02.2017 | காயச்சான்று | அ.சா.4 மூலம் |

3. அரசு தரப்பு சான்று பொருள் : இல்லை.

4.எதிரி தரப்பு சாட்சிகள்,சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்: இல்லை.

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 19:34:49 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
மன்னார்குடி.

குறிப்பு

1) வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
2) எந்த சாட்சிகளும் மூன்று முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3)வழக்கின் முடிவு எதிரிகளுக்கும் காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 19:34:56 +0530

**நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது**

**மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள்,**
**திருவாரூர்.**

JAYARAMAN
TAMIZHMURUGAN

Digitally signed by
JAYARAMAN
TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN
TAMIZHMURUGAN,
o=TAMIL NADU
STATE JUDICIAL
SERVICE, st=Tamil
Nadu, c=IN
Date: 2026.06.02
19:35:04 +0530